# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜாமக்காரன்

JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 6** **Reg No.TNBIL/2016/70171** **ISSUE - 10**

**OCTOBER 2022 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே,

உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

இம்முறையும் செப்டம்பர், அக்டோபர் ஆகிய இரண்டு மாத பத்திரிக்கைகளை ஒரே கவரில் வைத்து அனுப்பப்படுகிறது, பத்திரிக்கை ஊழியம் தொடர்ந்து நடத்த கர்த்தர் அளவில்லாமல் தயை புரிகிறார்.

இந்த இரண்டு மாத பத்திரிக்கைகளும் உங்கள் கைகளில் 2023ம் ஜனவரி மாதம் கிடைக்கும்.

புதிய வருட வாக்குத்தத்தைப்பற்றி கடந்த ஆகஸ்ட் மாதம் விளக்கமாக எழுதியிருந்தேன்.

புதிய வருட சிந்தனைக்கு வேதத்தில்உள்ள இரண்டு சம்பவங்களை ஞாபகக்கப்படுத்துகிறேன். (1) யாத் 17:6 (2) எண். 20:8 இரண்டும் ஒரே மாதிரியான பெரிய அற்புதங்களாகும். யாத். 17:6ல் இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திரத்தில் பிரயாணம் செய்து கர்த்தர் வாக்களித்த பாலும் தேனும் ஓடும் செழிப்பான கானான் தேசத்துக்கு கொண்டு போய் சேர்க்க மோசே தலைமை ஏற்று அழைத்து வருகிறார், **ரெமீதிம்மில்** வந்து தங்குகிறார்கள், ஆனால் அது தண்ணீர் இல்லாத தேசம், ஜனங்கள் கோபமுற்று எங்களையும் எங்கள் குடும்பத்தையும், ஆடு, மாடுகளையும்

## OCTOBER - 2022

இந்த தேசத்தில் தண்ணீர் இல்லாமல் நாவறண்டு சாகடிக்கவா எங்களை கொண்டு வந்தீர் என்று மோசேயிடம் கூறி முறுமுறுக்க ஆரம்பித்தார்கள்.

இதற்குமுன் கர்த்தர் பார்வோன் கையிலிருந்து இந்த ஜனங்களை விடுவித்து **சமுத்திரத்தை இரண்டாக பிளந்து** தண்ணீரில் கால் நனையாமல் வெட்டாந்தரையில் நடக்க வைத்த **இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதத்தை கண்ணார கண்டு** அதிசயித்தவர்கள் அதோடு துரத்தி வந்த எகிப்தியர்கள் அத்தனை பேரையும் ஒருவன் கூட தப்பாதபடி கர்த்தர் கொன்றுபோட்டு இனி தன் மக்களுக்கு எதிரியே இல்லாமல் அவர்களை காப்பாற்றி நடத்தி வந்தததை இந்த ஜனங்கள் மறந்துபோனார்கள். அதோடு அவர்கள் பட்டினிப்போடாமல் ஒவ்வொரு நாளும் **புதிய மன்னா** என்ற ருசியுள்ள **ஆகாரம்** கொடுத்து பசியை போக்கிய அற்புதத்தை மறந்தார்கள். தினசரி **சைவ சாப்பாடே** சாப்பிட்டால் எப்படி எங்களுக்கு **அசைவ ஆகாரம்** கிடைக்காதா? என்று அதற்கு ஒரு **கோபம், முறுமுறுப்பை** காண்பித்தார்கள். உடனே கர்த்தர் **கோழிக்கறியைவிட** ருசியுள்ள விலையுயர்ந்த **காடை இறைச்சியை** தினசரி வரவழைத்து சாப்பிட கொடுத்த அந்த அற்புதத்தையும் மறந்தார்கள். இவர்கள் பிரயாணம் செய்யும்போது வெயிலில் வாடாதபடி பயணிக்க **கருத்த மேகங்களை** கர்த்தர் வரவழைத்து **குடைப்பிடிப்பதை** போல வழிநெடுக **குளிர்ச்சி** காற்றோடு **களைப்பு உண்டாகாமல்** வழிநடத்திக்கொண்டிருக்கும் **அற்புதங்களை** அனுபவித்துக்கொண்டே **புதிய தேசத்துக்கு** வந்து சேர்ந்தார்கள். அந்த தேசத்தில் **தண்ணீர் பஞ்சம்** குடிக்க தண்ணீர் எங்கும் இல்லை. இதை பார்த்து மறுபடியும் மக்கள் கர்த்தர் மேல் கோபம் கொண்டு வழிநடத்தும் மோசேயிடம் வாய்க்குவந்தபடி பேச ஆரம்பித்து **மோசே** மீது **கல் எறிய** ஆரம்பித்தார்கள்,

மோசே அந்த ஜனங்களோடு பேசும் போது என்னிடம் ஏன் உங்கள் கோபத்தை காட்டுகிறீர்கள்?. இதுவரை **இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களை** செய்து உங்களை **பட்டினி போடாமல்** சுகமாய் நடத்தி வந்தது **நான் அல்ல, கர்த்தர்.** நீங்கள் ஏன் **கர்த்தரிடம் கேட்க கூடாது.** அதாவது எப்போதும் ஊழியக்காரனையோ பாஸ்டரையோ உறவினரையோ நம்பிக்கொண்டிராமல் **நீங்களே கர்த்தரிடம்** கேட்டு பெற்றுக்கொள்ள பழகுங்கள் என்ற அர்த்தத்தோடு கூறினார்.

உண்மை தானே ! நம்முடைய வாழ்க்கையிலும் **நாமே** கர்த்தரிடம் கேட்டு பெற்றுக்கொள்ள பழக வேண்டும். **நம் பிள்ளைகளுக்கும்** கர்த்தரிடம் ஜெபிக்க பழகிவிக்கவேண்டும். **எங்கள் பிள்ளைகள்** சிறு வயதில் பேனா தொலைந்துவிட்டது, எனக்கு ஜமெண்ட்ரி பாக்ஸ் வேண்டும் என்று எங்களிடம் கேட்பார்கள். அப்போது என் மனைவி **முதலில் நீங்கள் இயேசு அப்பாவிடம்** ஜெபித்து உங்கள் தேவைகளை கேட்டீர்களா? போங்கள் போய் ஜெபித்து விட்டு பிறகு அப்பாவிடம் போய் கேளுங்கள். பெற்றோராகிய நாங்களும் எங்களுக்கும், எங்கள் தேவைகளுக்கும் நாங்கள் ஆண்டவரிடம் தான் கேட்போம், பிள்ளைகள் **படிப்பு விஷயம்,**

பிள்ளைகளின் மற்ற **தேவைகள்** எதுவானாலும் அவரிடம்தான் நாங்கள் முதலில் சென்று கேட்போம். அதன்படி நீங்களும் செய்யுங்கள். இப்படி நாங்கள் கர்த்தரையே சார்ந்திருப்பதால் கர்த்தர் **எங்களையும்** எங்கள் **குடும்பத்தையும்** இந்த அளவு எல்லா **ஊழியருக்கும்,** உறவினர்க்கும் **மேலாக எங்களை உயர்த்தி இருக்கிறார்.**

இங்கு மோசே கர்த்தரிடம் மக்களின் நன்றி இல்லாத தன்மைக்கு மன்னிப்பு கேட்டு தண்ணீர் தேவைக்கு கர்த்தரிடம் ஜெபித்தார். அப்போது கர்த்தர் **நீ உன் கோலை எடுத்துக்கொண்டு** மக்களின் **மூப்பர்களை** அழைத்து கொண்டு **ஓரேப்** என்ற இடத்தில் உள்ள சிறுமலைக்கு புறப்பட்டு வா, உனக்கு முன்னே நான் அங்கு இருப்பேன் என்றார். அப்படியே மோசே **மூப்பர்களோடு** அங்கு சென்றான். சாட்சிக்காக கர்த்தர் மூப்பர்களை அழைத்து செல்ல கட்டளையிட்டார். கர்த்தர் செய்யப்போகும் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதத்தை நேரில் கண்ட சாட்சிக்காக மூப்பர்களை அழைத்து செல்ல கட்டளையிட்டார்.

அங்கு எல்லாரும் வந்து சேர்ந்ததும் கர்த்தர் **மோசேவை நோக்கி** நீ அந்த கன் மலையை நோக்கி **உன் கையில் உள்ள கோலினால்** அடி என்றார், **அடித்தவுடன் உடனே** தண்ணீர் **பாறையில்** இருந்து குபுகுபுவென்று புறப்பட்டு வந்தது. கர்த்தர் இந்த அற்புதத்தை செய்தார் என்பதை மூப்பர்கள் மூலமாக மக்களுக்கு விளங்க வைத்தார்.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்ன? என்று வாசகர்கள் சிந்தியுங்கள், நம்மை புறப்பட சொன்ன தெய்வம் நம்மை **பட்டினிப் போடுவாரா?** தண்ணீர் இல்லாமல் **தாகத்தால் சாகவிடுவாரா?**கர்த்தர் கிரியை செய்யும் வரை **நாம் பொறுமையோடு காத்திருக்க வேண்டும்.** மலையிலிருந்து தண்ணீர் வரச்செய்ததின் அர்த்தம், **நீ எதிர்பாராத இடத்திலிருந்து** நமக்கு உதவி வரும் என்பதாகும். **ஜாமக்காரன் வாசகர்களாகிய** உங்கள் சகல தேவைக்கும் கர்த்தரிடம் ஜெபத்தில் தரித்திருந்து **பொறுமையோடு காத்திருக்க வேண்டும்.** நம் தேவன் தன்னை நம்பியவர்களை வெறும் கையாக அனுப்ப மாட்டார். நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக வானத்திலிருந்தும், காற்றின் மூலமாகவும், வெறும் வறண்ட **பாறையிலிருந்தும்** ஆகாரமும் **தண்ணீரும் கொடுக்க முடியும்.** இப்படிப்பட்ட தெய்வம் இப்புது வருடத்தில் உங்கள் தேவைகளை, **பிள்ளைகளின் திருமண** தேவைகளை **சந்திக்க மாட்டாரா?**

**ஆபிரகாம்,** யோசேப்பு, யாக்கோபு ஆகியவர்களின் தேவைக்கு கர்த்தரிடம் ஜெபித்தபோது பல வருடங்கள் காத்திருக்க வேண்டியது அவசியமாயிற்று. ஆகவே நீங்களும் சோர்ந்து போகாதீர்கள்.

இரண்டாவது எண்ணாகமம் 20:8ல் **மேலே வாசித்ததைப்போல** ஒரு சம்பவம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு நடந்தது. நம் காலத்தல் கூறும் **ஜனவரி மாதம்** போல அவர்களின் **கால கணக்கின்படி முதல் மாதத்திலே** சீன் என்ற **வனாந்தரத்திலே** வந்து சேர்ந்தார்கள்.

அங்கும் பெரும் **தண்ணீர் பஞ்ஜம்,** இந்த ஜனங்கள் மறுபடியும் மோசேயோடே தண்ணீருக்காக **வாக்குவாதம் செய்தார்கள்.** இந்த ஜனங்கள் ஏற்கனவே சில வருடங்களுக்கு முன் இதே போல தண்ணீர் பஞ்ஜத்திலே அகப்பட்டபோது மோசேயை **பாறையை கோலால் அடிக்க சொன்னபோது** தண்ணீர் அற்புதமாக பாறையிலிருந்து புறப்பட்டு வந்து இவர்களின் தாகத்தைத் தீர்த்த அனுபவத்தை ருசித்தவர்கள்.

ஆனால் இங்கு தங்கள் தேவைக்கு **தானே கர்த்தரிடம் கேட்டு** பெற்றுக்கொள்ளும் வழக்கத்தை மறந்துப்போனார்கள். பதிலாக மோசேயோடு **வாக்குவாதம்** உண்டாக்கி மோசேயை கோபப்படுத்தினார்கள். உடனே மோசே தன் சகோதரனாகிய ஆரோனைகூட கூட்டிக்கொண்டு போய் கர்த்தரின் சன்னதியில் **முகம் குப்புற விழுந்து** கதறி அழுதார்கள். கர்த்தர் மோசேயின் ஜெபத்தை கேட்டு, **நீ உன் கோலை எடுத்துக்கொண்டு** சகல ஜனங்களையும் மலைக்குமுன் வரவழைத்து நிறுத்த சொன்னார். முன்பு **மூப்பர்கள்** சாட்சியாக தண்ணீர் அற்புதத்தை காண்பித்தார். ஆனால் இப்போதோ **சகல ஜனங்களுக்கு முன்பாக** மிகுந்த கோபத்தோடு நிற்க, கர்த்தர் மோசேயோடு மலையை **பார்த்து பேசு** என்றுதான் சொன்னார். ஆனால் மோசே **தன் கோபத்தை** காண்பிக்க மலையோடு **பேசுவதற்குப் பதிலாக** தன் கையிலிருந்த தடியினால் **இரண்டு தரம்** ஓங்கி **அடித்தான்.** இந்த இடத்தில்தான் **மோசே பெரிய தவறு செய்துவிட்டான்.** அது தேவனுக்கு விசனமாக போனது.

**பேசு** என்றுதான் கூறினேன். **நீ ஏன் அடித்தாய்** உன் பெலத்தினால் அடித்ததால் அந்த தண்ணீர் வந்தது என்று ஜனங்கள் **உன்னை புகழலாம்**. ஆனால் மலையை பார்த்து வெறும் வாயால் பேசினால் அது எத்தனை இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிசயம். அது என்னை மகிமைப்படுத்தியிருக்குமே ! அதற்கு இடம் கொடுக்காமல் **மலையை அடித்துவிட்டாயே!**

அதனால் **மோசே –** ஆரோன் இருவரும் **நான் உங்களுக்காக** ஆயத்தம் பண்ணின **பாலும் தேனும்** ஓடும் செழிப்பான **கானான் தேசத்துக்குள் பிரவேசிக்க அனுமதிக்க மாட்டேன்** என்றான். **எப்படிப்பட்ட ஏமாற்றம்** இது !

கடந்த **நாற்பது வருடம்** தன் **அரண்மனை** வாழ்வை இழந்து இந்த இஸ்ரவேல் மக்களை **எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து** விடுவித்து **கடலை பிளந்து** பல **அற்புதங்களை நடப்பித்து** அந்த மக்களின் **முறுமுறுப்பையும்** தன்னை **அவமானப்படுத்தியதையும்** சகித்து **நாற்பது வருடங்கள்** படாதபாடுபட்டு இந்த மக்களை பத்திரமாக நடத்தி கூட்டி **கானான் எல்லை வரை அழைத்து வந்து** நீ மட்டும் போகவேண்டாம். நீ கீழ்படியாததால் நீ போகாதே. மற்ற ஜனங்கள் யாவரும் கானானுக்குள் பிரவேசிக்கட்டும் என்றார். அது சாதாரண ஏமாற்றமா? மோசே மனதில் எப்படிப்பட்ட வேதனையை அனுபவித்திருப்பார்.

எத்தனையாய் கர்த்தருக்கு உண்மையாய் நடந்தவன் மோசே. பல வருடங்கள் கழித்து வனாந்திரத்தில் சந்தித்த தன் **மனைவி** பிள்ளைகளோடு ஒரு நாள்கூட அவர்களோடு தங்கி

சந்தோஷம் அனுபவிக்காமல் கர்த்தரின் ஊழியத்தை செய்ய **மனைவி, பிள்ளைகளின் பாசம்** தடையாக இருக்குமோ என்று அவர்களின் சொந்த ஊர்களுக்கே திருப்பி அனுப்பிய உண்மையான தெய்வத்தின் ஊழியக்காரனின் முடிவை பார்த்தீர்களா ?

விபச்சாரம் செய்யவில்லை, பாவம் செய்யவில்லை, கொலை செய்யவில்லை, பேசு என்று கட்டளையிட்டதற்கு **தன் தடியால் அடித்தது** அத்தனை பெரிய பாவமா? என்று கேட்கும் அன்பான வாசகர்களே ! கர்த்தர் அத்தனை கொடூரமானவரா! என்று நமக்கு கேட்கத் தோன்றும்.

நம் ஆண்டவர் வித்தியாசமானவர், கீழ்படிதலுக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பவர், **ஆதாம்** ஏவாள் **பெரிய பாவம்** செய்யவில்லையே, **சாப்பிடாதே** என்று கட்டளையிட்ட பழத்தை கடித்தார்கள், அவ்வளவே உடனே அவர்களை ஏதேன் தோட்டத்தை விட்டே வெளியே தள்ளிவிட்டாரே, சில சமயம் இச்செயல் மனுஷ புத்திக்கு கர்த்தர் கொடூரமானவராக தோன்றும். அதனால் வேத வசனம் கூறுகிறது, **பலியை பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம்**, நம் ஆண்டவர் எதிர்பார்ப்பது **கீழ்படிதல்** மட்டுமே. இந்த **கீழ்படிதல்** இருந்தால் **வேதம் வாசிப்பாய்,** வசனத்துக்கு **கீழ்படிவாய்,** கர்த்தருக்கு **பிடித்தமானதை மட்டும்** செய்து கர்த்தருடைய பிள்ளையாக வாழ்வாய். ஆகவே நம் கர்த்தர் நம் எல்லாரிடமும் எதிர்பார்ப்பது கர்த்தரின் வசனத்துக்காக கீழ்படியவேண்டும் என்பதே.

இந்த 2023 **புதுவருட தீர்மானமாக** என்னென்ன வசனத்துக்கு நான் கீழ்படியவில்லை, எது எதெல்லாம் என் ஆண்டவர் **மனதை வேதனைபடுத்தும்** என்றெல்லாம் கேள்விக்கேட்டு தற்பரிசோதனை செய்து கர்த்தருடைய பிள்ளையாய் வாழ்வோம்.

கர்த்தரின் கிருபை உங்கள் அனைவரோடும் புதுவருடத்திலும் (2023) இனி வரும் காலங்களிலும் கூட இருப்பதாக. ஆமென்,

உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார் இயேசு. மத். 28:20

– டாக்டர் **புஷ்பராஜ்**

## ONLINE BANKING (NEFT)

### Name : M G E PUSHPARAJ

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**
SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**
SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# தலைசிறந்த முதன்மையான கட்டளை
# GREATEST COMMANDMENT

போதகரே திருச்சட்ட நூலில் தலைசிறந்த கட்டளை எது ? என்று திருச்சட்ட அறிஞர் ஒருவர் கேட்டார். அதற்கு இயேசு, உன் முழு இருதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனதோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து. இதுவே தலை சிறந்த முதன்மையான கட்டளை என்று பதில் அளித்தார். மத். 22:36-38.

உலகிலேயே முதன்மையானது, உலகத்திலேயே மிகப்பெரிய சாதனை, உலகிலேயே முதல் நிலை வீரர். இப்படிப்பட்ட வார்த்தைகளை மனிதன் கேட்கும்போது அவனுக்குள் ஒரு பெரிய உற்சாகம், பெரிய உந்துதல் சக்தி உருவாகிறது. ஏதாவது ஒரு துறையில்தான் உலகிலேயே முதன்மையான ஸ்தானத்தைப் பிடிக்கவேண்டும். இதுவரை யாரும் சாதிக்காத ஒரு சாதனையை சாதிக்க வேண்டும் என்று ஒவ்வொரு வாலிபனும் விரும்புகிறான். இது இயற்கையாகவே ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் ஒரு ஆசை.

## உலகிலேயே முதன்மையான சாதனையாளர்கள்

இந்த உலகத்திலேயே மிக உயரமான மலை நமது இந்தியாவின் எவரெஸ்ட் சிகரம். உலகிலேயே மிகப் பெரிய நீர்வீழ்ச்சி - கனடாவில் உள்ள நயாகரா நீர்வீழ்ச்சி. உலகிலேயே மிகப்பெரிய ஓட்டவீரர் அமெரிக்காவின் வெஸ்லி ஓவன்ஸ். மிகப்பெரிய பணக்காரர் பில்கேட்ஸ், மிகப்பெரிய கிரிக்கெட் வீரர் ஆஸ்திரேலியாவை சேர்ந்த டான் பிராட்மேன். இந்த உலகிலே மிகப்பெரிய கட்டளை உன் முழு இருதயத்தோடு கடவுளிடம் அன்பு செலுத்து.

வேதாகமத்தில் நமக்கு ஆயிரத்திற்கு மேலாக கட்டளைகள கொடுக்கப்பட்டிருந்தாலும் அதில் முதன்மையானது இது. இந்த உலகத்தில் நாம் ஆண்டவருக்காக செய்யும் ஒவ்வொரு செயலையும் செய்யத் தூண்டும் ஆக்கப்பூர்வமான சக்தி எது ? நமது தாலந்தா ? நமது திறமையா ? நமது மூளை அறிவா? நமது பணமா ? நமது சொந்த பெலமா ? நிச்சயமாக இல்லை.

## நம்மை இயக்கும் மிகப்பெரிய சக்தி

ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையை இயக்கும் மிகப்பெரிய சக்தி - கடவுள் மேல் நாம் வைத்துள்ள அன்பு. நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் சிந்திக்கும் ஒவ்வொரு சிந்தனையும் தேவன்மேல் நாம் வைத்துள்ள அன்பு என்ற வற்றாத நீர் ஊற்றிலிருந்து புறப்படவேண்டும். இதைத்தான் பவுல் தேவனுடைய அன்பு என்னை நெருக்கி ஏவுகிறது என்று எழுதுகிறார். 2கொரி. 5:14 என்னை விசுவாசிக்கிறவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் புறப்பட்டுப்போகும் என்று வேதம் கூறுகிறது. (யோ. 7:38)

மிஷனெரி பயிற்சியை முடித்துவிட்டு பணித்தளத்திற்குச் செல்ல ஆயத்தமாக இருந்த சில மிஷனரிகளோடு ஹட்சன் டெய்லர் அவரவர்கள் சம்பாஷிக் கொண்டிருந்தார். நீங்கள் ஏன் மிஷனெரியாக போக விரும்புகிறீர்கள் ? என்று கேட்டார். அதற்கு அவர்கள் ஆத்தும ஆதாயம் செய்ய

விரும்புகிறேன். இது ஆண்டவருடைய கட்டளை என்னுடைய அம்மா என்னைஅர்ப்பணித்தார்கள். இப்படியாக பலவிதமான பதில்கள் கொடுத்தார்கள்.

இந்த பதில்கள் அனைத்தையும் கேட்டுவிட்டு ஹட்சன் டெய்லர் இவ்வாறு பதில் கொடுத்தார்.

நீங்கள் சொல்லிய காரணங்கள் அனைத்தும் சரியானதுதான். ஆனால் பணித்தளத்தில் நீங்கள் சந்திக்கப்போகும் சவால்களையும் கஷ்டங்களையும் தாங்கிக்கொள்ளும் அளவிற்கு அவைகள் போதுமானவைகளா என்பது சந்தேகத்திற்குரியது. நீங்கள் மிஷனெரியாக போகும் பணித்தளத்தில் எழும் எல்லா சவால்களையும் சந்திக்க கூடிய போதுமான காரணம் ஒன்றே ஒன்று தான். நீங்கள் தேவன்மேல் வைத்திருக்கிற அன்பு மாத்திரமே. அதுவே போதுமானதும் கூட

## நீ என்னில் அன்பு கூறுகிறாயா ?

ஒரு முறை பேதுருவைப் பார்த்த இயேசு யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ என்னில் அன்பு கூறுகிறாயா? என்று கேட்டார் ( யோவான் 21:15) இதே கேள்வியை 21ம் நூற்றாண்டில் வாழும் நம்மையும் பார்த்து என் மகனே, என் மகளே நீ என்னை நேசிக்கிறாயா? முழு இருதயத்தோடு, முழு பெலத்தோடும் நேசிக்கிறாயா? என்று கேட்கிறார். என்ன பதில் சொல்லுவோம்? பேதுருவைப் போல ஆண்டவரோ, நான் உம்மை நேசிக்கிறேன் - என்று உமக்கே தெரியும். இதற்கு மாறாக நம்மில் இன்னும் சிலர் ஆண்டவரே நான் உம்மை நேசிக்கவில்லை என்று உமக்கே தெரியும் - என்று பதில் சொல்லப் போகிறோமா ?

நாம் ஆண்டவரை நேசிக்கிறோமா ? அவரில் அன்பு கூறுகிறோமா ? என்பதை இச்செய்தியின் மூலம் வேத வசனத்தின் வெளிச்சத்தில் நாம் இப்பொழுது சோதிக்கப்படுகிறோம். எந்த ஒரு பொருளையும் நாம் சோதிப்பது நமது வழக்கம். கடையில் போய் காய்கறி வாங்கினாலும் துணிக்கடையில் துணி எடுத்தாலும், விலையேறப்பெற்ற ஒரு பொருளை வாங்கினாலும் சோதிப்பது நமது வழக்கம். அதுபோலவே நாம் தேவனிடத்தில் அன்பு கூறுகிறோமா - உண்மையான அன்பா, போலி அன்பா. மேல்வாரியான அன்பா, ஆழமான அன்பா ? நாம் ஆண்டவரிடத்தில் அன்பு கூறுவது உண்மையானால் நம்மை நாமே கீழே கொடுக்கப்பட்ட 5 வித்தியாசமான சோதனைகளாலே சோதிப்பது நல்லது.

## நாம் தேவனிடத்தில் அன்பு கூறுவது உண்மையானால் நாம்

1. கர்த்தருக்கு பயப்பட வேண்டும். (உபா. 10:12)
2. கர்த்தருடைய வழியில் நடக்க வேண்டும். (உபா. 10:12)
3. கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும். ( உபா. 10:12)
4. கடவுளுக்கு கீழ்படிய வேண்டும். ( யோவா. 14:15)
5. ஆண்டவரது அன்பு நம்மிடத்தில் இருப்பது உண்மையானால். நமது உலக ஆஸ்தியை பகிர்ந்து கொடுக்க முன்வர வேண்டும். (1 யோ. 3:17,18)

## 1. கர்த்தருக்கு பயப்படுகிற பயம்

இப்பொழுது இஸ்ரவேல் நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து அவருக்கு பயந்து... (உப. 10:12) மேலே கொடுக்கப்பட்ட வசனத்தை இப்படியாக சிந்திக்க விரும்புகிறேன். இஸ்ரவேலே நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்பு கூறுவது உண்மையானால் நீ அவருக்கு பயப்பட வேண்டும்.

ஆம் ! நாம் தேவனை நேசிப்பது உண்மையானால் அவருக்கு நாம் பயப்பட வேண்டும். இங்கே பயப்படுதல் என்ற பதத்திறகு இரண்டுவிதமான அர்த்தங்கள் உண்டு. முதலாவது பயம் - போலீசுக்கும், தண்டனைக்கும் பயப்படுகிற பயம்.

## இரண்டு வகையான பயங்கள்

### 1, (a) போலீஸ் பயம்

ஒரு ஞாயிறு பள்ளியில் ஒரு ஆசிரியை மாணவர்களைப் பார்த்து, நாம் திருடக்கூடாது. ஏன் என்று காரணம் யாராவது சொல்லுங்கள் என்று கேட்டார்கள். அதற்கு ஒரு குழந்தை டீச்சர், நாம் திருடினால் போலீஸ் நம்மை பிடிச்சிட்டுபோய் ஜெயலில் போட்டுவிடுவார்கள் என்று பதில் சொன்னதாம். ஆம்! சிலர் இல்லை பலர் திருடாமல் இருப்பதற்கு இதுதான் உண்மையான காரணம். இப்படி தண்டனையின் நிமித்தம் பயம் இருப்பது நமது சமுதாயத்திற்கு நல்லதுதான். அப்படி இல்லாவிட்டால் நாட்டில் சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்படமாட்டாது. ஆனால் இவ்வகையான பயம் கடவுளுக்கு உகந்தது அல்ல.

### 1. (b) தீமையை வெறுக்கும் பயம்

நாம் திருடக்கூடாது காரணம் என்ன ? என்ற அதே கேள்விக்கு இன்னொரு குழந்தை கொடுத்த பதில். டீச்சர் அப்படி திருடுவது தப்பு என்று பதில் கொடுத்தது. இந்த வகை பயம் - அதாவது நாம் திருடினால் ஆண்டவரது கட்டளையை மீறுவோம். ஆண்டவரது மனம் புண்படும். எனவே திருட மாட்டேன் என்று சொல்லுவதுதான் நியாயமானது. நேர்மையானது. இவ்வகையான பயம்தான் கர்த்தருக்குப் பயப்படுகிற பயம். இதுவே ஞானத்தின் ஆரம்பம்

தீமையை வெறுப்பதே கர்த்தருக்கு பயப்படுகிற பயம். (யோபு 1:8) இதனுடைய அர்த்தம் தப்பு தவறுகள் அநியாயங்கள் செய்யாமல் இருப்பது ஒன்று. ஆனால் அந்த தவறுகளை அநியாயமான செயல்களை செய்ய அஞ்சுவது, பயப்படுவது முற்றிலும் இன்னொரு இவ்வகையான பயம்தான் இங்கே நாம் சிந்திக்க விரும்புவது. கடவுளுக்கு பயப்படுகிற பயம் வெள்ளியைப்போல் தங்கத்தைபோல் சுத்தமானது. விலையேறப்பெற்றது. கடவுளுக்கு பயப்படுகிற மனிதன் எந்த மனிதனுக்கும் பயப்படமாட்டான். தலை நிமிர்ந்து நடப்பான். ஆனால் கடவுளுக்கு பயப்படாதவன் தனது நிழலுக்குகூட பயப்படுவான். பயந்து பயந்து வாழ்வான். மன்னிக்கவும் பயந்து பயந்து சாவான். அவன் தலை குனிய வேண்டும்.

### 1. (c) வாலிபன் யோசேப்பு – கடவுளுக்குப் பயப்படுகிற பயத்தை வாழ்ந்து காட்டினான்.

இளம் வாலிபனான யோசேப்பை எடுத்துக்கொள்ளுங்கள். அவனது எஜமானியாகிய திருமதி. போத்திபார் மூலம் ஒரு சோதனை வந்தது. அவளது தவறான விருப்பத்திற்கு இவன் இணங்காத போது யோசேப்பு இப்படியாக காரணத்தை விளக்குகிறான். நான் இத்தனை பெரிய பொல்லாங்கிற்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வது எப்படி? (ஆதி. 39:9) என்று யோசேப்பு என்ற இளம் வாலிபன் கேட்கிறான். இந்த இடத்தில் யோசேப்பு கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் என்றால் என்ன என்பதை பரிசோதனை சாலையில் (Laboratory) நடைமுறை வாழ்க்கை என்ற பரிசோதனை மூலமாக நமக்கு விளக்கிவிட்டான். இதைத்தான் நான் உண்மையான கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் – என்று சொல்லுகிறேன்.

தேவனிடத்தில் நாம் அன்பு கூறுவது உண்மையானால் நாம் கடவுளுக்கு விரோதமாக பாவம் செய்ய பயப்பட வேண்டும். சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் ஆண்டவரது மனம் புண்படாமல் நாம் நமது பேச்சில் நடத்தையில் செய்கையில், பார்வையில், நாம் நமது உள்ளான நோக்கங்களில் அவரது நாமத்திற்கு அவதூறு வராமல் நடந்துக்கொள்ளவேண்டும். மனுஷனுக்கு பயப்படுகிற பயம் கண்ணியை வரவழைக்கும் கடவுளுக்கு பயப்படுகிற பயமோ, நித்திய பலனைக் கொடுக்கும்.

## 2. கர்த்தருடைய வழியில் நடவுங்கள்

இப்பொழுதும் இஸ்ரவேலே, நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து, கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடந்து... (உபா 10:12)

நாம் ஆண்டவரிடத்தில் அன்பு கூறுவது உண்மையாக இருக்குமானால் முதலாவது கடவுளுக்குப் பயப்பட வேண்டும். இரண்டாவது அவரது வழிகளில் நாம் நடக்க வேண்டும்.

## 2. கர்த்தருடைய வழிகளில் நடப்பது என்றால் என்ன?

கடவுளிடத்தில் நாம் அன்பு வைத்திருப்பது உண்மையானால், அதை நமது அன்றாட வாழ்க்கையில் நிரூபிக்க வேண்டும். நாம் ஒருவர் மேல் வைத்திருக்கிற அன்பை நம்மால் அளக்கவோ, தராசில் வைத்து நிறுத்தவோ, கெட்டுப் போகாமல் இருப்பதற்கு fridgeல் வைக்கவோ முடியாது. ஆனால் ஒருவர் மேல் வைத்துள்ள அன்பை நமது அன்றாட செயல்கள் மூலமாக எளிதில் வெளிபடுத்த முடியும். ஒரு விருந்தினர் நமது வீட்டிற்கு வருவதாக கற்பனை செய்துக்கொள்ளுங்கள் அல்லது நீங்கள் இன்னொருவரது வீட்டிற்கு விருந்தினராக போவதாக எண்ணிக்கொள்ளுங்கள். அவர்களை நீங்கள் வாங்க என்று வரவேற்கிறீர்கள். ஆனால் அந்த வாங்க வாங்க என்ற வார்த்தையிலும், அதைச் சொல்லுவதற்கு நீங்கள் உபயோகித்த Body Language அதாவது வாங்க என்று சொல்லும் போது உங்கள் முக பாவனைகள், வரவேற்ற தோரணை இவை எல்லாவற்றிலும் உங்களது அன்பு அல்லது வெறுப்பு உங்களுக்குத் தெரியாமலே வெளிப்படுகிறது. அவைகள் மூலம் உங்களை அறியாமலே உங்களை நேசிக்கிறேன் என்ற செய்தியை மற்றவர்களுக்கு சொல்லி விடுகிறீர்கள்.

நமது வழிகள் என்றால் நாம் எப்படி மற்றவர்களோடு பழகுகிறோம். நமது பழக்க வழக்கங்கள் நாம் பேசும் பேச்சுக்கள் நமது நல்ல – கெட்ட பழக்க வழக்கங்கள் நாம் நடந்துக்கொள்ளும் விதம், நாம் பார்க்கும் பார்வைகள், நமது உள்ளான மறைந்திருக்கும் நோக்கங்கள், நமது கோபங்கள், தாபங்கள், நமது தீர்மானங்கள் இவைகள் தான் நமது வாழ்க்கையின் வழிகள் எப்படிப்பட்டவைகள் என்பதை உலகிற்கு பறைசாற்றுகின்றன.

மனிதனுக்கு செம்மையாகத் தோன்றுகிற ஒரு வழி உண்டு. ஆனால் அது மரண வழி (நீதி14:12) என்று வேதம் எச்சரிக்கிறது. இதிலிருந்து என்ன கற்றுக்கெள்ளுகிறோம்? நான் இப்பொழுது போகும் வழி நல்ல வழிகள் என்று மனிதன் சொல்லுகிறான். ஆனால் ஆண்டவர் அது மரண வழி என்று கூறுகிறார், ஏன் என்ன காரணம்? மனிதர்களாகிய நம்மால் நமது வழிகளின் ஆரம்பத்தைத் தான் பார்க்க முடியும். நமது வழிகளின் முடிவைப் பார்க்கக் கூடிய ஆண்டவரிடத்தில் நமது வழியை ஒப்புக் கொடுப்பது நல்லது மாத்திரமல்ல பாதுகாப்பானதும்.

## 2. (b) ஆகாய் தீர்க்கதரிசியின் எச்சரிக்கை:

உங்களது வியாபாரத்தில் உங்கள் வேலையில் உங்களது தனிப்பட்ட வாழ்க்கையில் உங்களது அந்தரங்க வாழ்க்கையில் தற்சமயம் ஒரு குறிப்பிட்ட பாதையில் நீங்கள் போய்க் கொண்டிருக்கலாம்.

உங்கள் வழிகளை நன்றாக சிந்தித்துப்பாருங்கள் என்று ஆகாய் தீர்க்கதரிசி எச்சரிக்கிறார் (1:7). நீங்கள் கைநிறைய சம்பாதிக்கிறீர்கள். ஆனால் சம்பாதித்து சம்பாதித்து பொத்தலான பையில் போடுகிறீர்கள். அதாவது நீங்கள் சம்பாதித்த பணம் வீண் வழியில் செலவழிக்கப்பட்டு விரயமாக்கப்படுகிறது. எனவே உங்கள் வாழ்க்கையின் வழிகளை ஆராய்ந்து, சீர்தூக்கிப் பாருங்கள் என்று நம்மையும் இஸ்ரவேல் மக்களையும் பார்த்து ஆகாய் தீர்க்கதரிசி எச்சரிக்கிறார் (சங் 1:4-6).

## பாவிகள் வழி என்றால் என்ன?

முதலாம் சங்கீதம் வசனத்தில் துன்மார்க்கரின் ஆலோசனையில் நடக்கவேண்டாம். பாவிகளின் வழியில் நிற்க வேண்டாம் என்று வாசிக்கிறோம். மற்றவர்கள் நமக்கு ஆலோசனை கொடுப்பது நல்லதுதான். ஆனால் அது நல்ல ஆலோசனையா? கெட்ட ஆலோசனையா? என்பதை சோதித்துப் பார்க்க வேண்டியது நமது பொறுப்பு. அன்னப்பறவையைப் போல் நல்லதை எடுத்துக் கொள்ளவும், தீயதை வடிகட்டி நீக்கிவிடவும் நாம் கற்றுக்கொள்ளவேண்டும். இந்த சங்கீதத்தில் பாவிகள் வழி என்று எழுதியிருப்பதை வாசிக்கிறோம். அது என்ன, அவினாசி சாலை, திண்டுக்கல் ரோடு, செம்பட்டி வழி- என்பது போல இதை பாவிகள் வழி என்று வேதம் அழைக்கிறது. பாவிகள் ரோடு - அதாவது இதனுடைய அர்த்தம் என்னவென்றால் நீங்கள் செல்லும் பாதை பாவம் செய்வதற்கு வழி வகுக்கும், தூண்டிவிடும் என்றால் அதைத்தான் பாவிகள் வழி என்று சங்கீதக்காரர் சொல்லுகிறார். ஒரு வேளை அந்த பாதையில் சாராயக் கடை, சூதாடும் இடம் இருக்கலாம், நடன சாலை இருக்கலாம். அதனால் தான் ஆண்டவர் நம்மை எச்சரிக்கிறார்.

**2.** (c) **பிலேயாமின் வழி :.**

இன்னொரு வழியை 2 பேதுரு 2:15ல் இப்படியாக வாசிக்கிறோம். செம்மையான வழியை விட்டுவிட்டு தவறான பிலேயாமின் வழியை பின்பற்றியவர்கள் அநீதியான கூலியை விரும்பியவர்கள் என்று வாசிக்கிறோம். அதாவது பணத்திற்கு ஆசைப்பட்டு அநியாயமான வழியில் என்று சம்பாதிப்பதைத்தான் வேதம் பிலேயாமின் வழி என்று அழைக்கிறது. பணம் நமக்குத் தேவைதான். ஆனால் அந்தப் பணம் நமக்கு வேலைக்காரனாகத் தான் இருக்கவேண்டுமே தவிர நமக்கு எஜமானனாக மாறிவிடக்கூடாது. இதை வாசிக்கும் அருமையான சகோதரனே நீங்கள் கடவுளை நேசிப்பது உண்மையானால் உங்களுடைய வழிகள் நேர்மையாக இருக்க வேண்டும். தன்னுடைய வழியை பாதுகாக்கிறவன் தன் ஜீவனை பாதுகாப்பதற்கு சமானம் என்று வேதம் கூறுகிறது (நீதி 16:17) தீமையை விட்டுவிலகுவதே நல்லவர்களுக்கு அடையாளம், தன் வழிகளில் நேர்மையாக இருக்கிறவனிடத்தில் அவனுடைய எதிரிகள் கூட அவன் பக்கமாக சேருவார்கள். உன் வழிகளை கர்த்தரிடத்தில் ஒப்படைத்து விடு. அவர்மேல் நம்பிக்கையாயிரு. அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார். (சங் 37:5) நீ நடக்கும் வழி நேர்மையாக இருந்தால் மாத்திரமே நீ கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணமுடியும் (மத் 3:3). நீ தற்சமயம் நடந்துபோகும் வழிகள், கர்த்தருக்குப் பிரியமானதா என்பதை சோதித்துப் பார், சிந்தித்துப் பார்.

வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும் (சங் 139 :24).நீங்கள் வலது, இடது பக்கம் சாயும் போது, வழி இதுவே. இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தைகளை உங்கள் காதுகள் கேட்கட்டும் (ஏசா 30:21)

### முழு இருதயத்தோடு கர்த்தருக்கு சேவை செய்வது:

இஸ்ரவேலே நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்பு கூறுவது, அவருக்குப் பயந்து அவருடைய வழிகளில் நடந்து உன் முழு இருதயத்தோடு முழு ஆத்துமாவோடு கர்த்தருக்கு சேவை செய் (உபா 10:12,13)

ஆண்டவரை நாம் நேசிப்பதற்கு மூன்றாவது ஆதாரம் நாம் அவருக்கு ஊழியம் செய்வது, பேதுருவைப் பார்த்து இயேசு மூன்று முறை நீ என்னை நேசிக்கிறாயா? என்று கேட்டு விட்டு அவர் சொன்ன வார்த்தை நீ என்னை நேசிப்பது உண்மையானால் என்னுடைய ஆடுகளை மேய்ப்பாயாக (யோ 21:17), ஆடுகளை மேய்ப்பது என்றால் மக்களுக்கு சேவை செய்வது ஆண்டவருக்கு ஊழியம் செய்ய வேண்டும்.

### 3 (a) எல்லோர் மேலும் விழுந்த கடமை:

ஆண்டவருக்கு ஊழியம் செய்வது நம் அனைவருடைய கடமை. போதகர்கள், மிஷனெரிகள், சுவிசேஷகர்கள், முழுநேர ஊழியர்கள் மாத்திரம் தான் ஆண்டவருக்கு ஊழியம் செய்ய வேண்டும் மற்றவர்கள் சும்மா இருக்க வேண்டும் என்று நினைப்பது தவறு. முற்றிலும் தவறு. இயேசுவை இரட்சராக இருதயத்தில் ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும், தங்களால் முடிந்த அளவிற்கு எப்படியாவது ஏதாவது ஒரு வழியில் ஆண்டவருக்கு ஊழியம் செய்ய கடமைப்பட்டிருக்கிறோம்.

### 3 (b) நீங்கள் வரையும் இயேசுவை இன்னும் கொஞ்சம் நேசியுங்கள்:

ஒரு ஓவியன் இறுதி இராப்போஜன விருந்தை ஓவியமாக வரைந்தானாம். அதை வரைந்து முடித்துவிட்டு அது எப்படி இருக்கிறது என்பதை கருத்துக் கணிப்பதற்காக (**opinion**) உலகப் புகழ்பெற்ற ரஷ்ய கதாசிரியர் டால்ஸ்டாயிடம் (**Tolstoy**) எடுத்துச் சென்றான். அதைப் பார்த்துவிட்டு, டால்ஸ்டாய் ஓவியனைப் பார்த்து பின் வருமாறு சொன்னாராம், இப்படத்தின் மத்தியில் இருப்பவரை நீ அவ்வளவாக நேசிக்கவில்லை என்றார். அதற்கு ஓவியன் ஐயா அது ஆண்டவராகிய இயேசு என்றான். அதற்கு டால்ஸ்டாய் அது எனக்கு நன்கு தெரிந்து தான் சொல்லுகிறேன், நீ வரைந்துள்ள இயேசுவின் முகம் நீ அவரை ஆழமாக நேசிக்கவில்லை என்று பறைசாற்றுகிறது. முதலில் அவரை நேசிக்க வேண்டிய விதத்தில் நேசிக்க கற்றுக்கொள். அதன் பின்பு ஓவியத்தை வரை என்று பதில் கொடுத்தாராம். ஆம் நாம் செய்கிற ஒவ்வொரு பணியிலும் சேவையிலும், ஊழியத்திலும் அதன் மத்தியில் இயேசு இருக்கிறார். இப்படியாக நாம் வரைந்துள்ள இயேசுவின் முகம் நாம் அவரை நேசிக்கவில்லை என்று சொல்லுகிறார்.

ஆண்டவருக்கு ஊழியம் செய்வது என்றால், ஒரு உயர்ந்த மேடையில் நின்று ஆயிரக்கணக்கான மக்களுக்கு பிரசங்கம் செய்வது தான் ஊழியம் என்று நாம் நினைக்கக் கூடாது. அந்த கூட்டம் நடக்க வேண்டுமானால் அதற்கு நோட்டீஸ் அடிக்க வேண்டும், சேர், டேபிள் போட வேண்டும். மைக் ஒழுங்கு செய்ய வேண்டும். மக்களை வரவேற்க வேண்டும், குடி தண்ணீர் ஒழுங்கு செய்ய வேண்டும். பாய் விரிக்க வேண்டும், இதையெல்லாம் யார் செய்வார்கள்? தேவ தூதர்களா? இல்லை நாம் தான் செய்யவேண்டும். எடுபிடி வேலை செய்வதும் ஊழியம் தான் என்ற உன்னதமான உண்மையை நாம் அறிந்து செயல்படுவது நல்லது.

பாரிஸ் நகரத்தில் புகழ் பெற்ற முரில்லோ என்ற ஓவியர் சேன்டியோகோ -வின் அற்புதம் என்ற தலைப்பில் தீட்டிய ஒரு ஓவியம் இருக்கிறதாம். அதில் ஒரு கதவு திறக்கப்படுகிறது. அதன் வழியாக இரண்டு பிரபுக்கள், ஒரு போதகர் ஆக மூவரும் ஒரு சமையல் அறைக்குள் நுழையும் காட்சி. அங்கே அவர்கள் நுழைந்தவுடன் அங்கு பல தேவ தூதர்கள் எடுபிடி வேலை செய்து கொண்டிருக்கிறார்களாம். ஒரு தேவ தூதர் காய்கறி அறுக்கிறார், இன்னொரு தேவ தூதர் அடுப்பை பற்ற வைத்து சோறு சமைக்கிறார், ஒரு தூதர் கோழிக்கறியை அறுத்துக் கொண்டிருக்கிறார், இன்னொரு தூதர் அடுப்பை ஊதிக் கொண்டிருக்கிறார். இதில் அடங்கியிருக்கிற செய்தியை புரிந்துக்கொண்டீர்களா? அதாவது எந்த வேலையையும் நாம் செய்வதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும். அதுதான் நாம் ஆண்டவருக்குச் செய்யும் ஊழியம். அந்த ஓவியத்தில் இயேசுகிறிஸ்து ஒரு ரம்பத்தை எடுத்து மரத்தை அறுத்துக் கொண்டு ஆசாரி வேலை செய்கிற ஒரு காட்சியும் படமாக்கி தொங்குகிறது – என்பது குறிப்பிடத்தக்கது.

## 3(C) செய்வன திருந்தச் செய்யுங்கள்:

இதை வாசிக்கிற நீங்கள் ஆண்டவரது ஊழியத்தை அது எப்படிப்பட்ட கீழ்த்தரமான வேலையாக இருந்தாலும் கூட அதைச் செய்ய ஆயத்தமாயிருக்கிறீர்களா? உலகப் புகழ்பெற்ற ஊழியர் ஓரல் ராபர்ட்ஸ் அவர்கள் தனது அலுவலகத்தில் அறையை சுத்தம் செய்து கொண்டிருந்த ஒரு பெண்ணை அழைத்து நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? என்று கேட்டாராம். அதற்கு அப்பெண் ஆண்டவருடைய ஊழியத்தை செய்து கொண்டிருக்கிறேன் என்று பதில் கொடுத்தாராம். நல்ல பதில், தைரியமான பதில், பொருத்தமான பதில்.

## தெருவைக் கூட்டினாலும் நன்றாக செய்யுங்கள்:

மார்ட்டின் லூத்தர் கிங் 1963- ம் ஆண்டு 10 லட்சம் நிறைந்த கருப்பு அமெரிக்கர்கள் மாநாட்டில் பேசும்போது அவர்களுக்குக் கொடுத்த ஒரு சவாலான ஆலோசனை. நீங்கள் எதைச் செய்தாலும் நன்றாக செய்யுங்கள். ஆண்டவருக்காக செய்யுங்கள். நியூயார்க் பட்டணத்தில் உள்ள தெருவை நீங்கள் கூட்டினாலும் இந்த உலகத்திலேயே தெருவை இவ்வளவு சுத்தமாக யாருமே கூட்டியது இல்லை என்று இந்த உலகமே உங்களை பாராட்டும்படியாக சுத்தமாக தெருவை சுத்தம் செய்ய பழகுங்கள் என்று சவால் விட்டார்.

நாம் ஆண்டவருக்கு ஊழியம் செய்வது முழு இருதயத்தோடும் முழு பெலத்தோடு செய்ய வேண்டும். அரை குறையாக அல்ல முழு மனதோடு நமது எண்ணங்கள், முயற்சிகள் சிதறாமல் சிந்தாமல் இருக்க வேண்டுமானால், நாம் முழு மனதோடு அதைச் செய்ய வேண்டும். அவன் ஒரு கிறிஸ்தவர் மாத்திரமல்ல, நல்லதொரு ஓவியன். ஒரு நாள் ஒரு பரிதாபமான காட்சியை ஒரு பெண் உணவில்லாமல், உடையில்லாமல், உறைவிடமில்லாமல் ஒரு பச்சிளங் குழந்தையை தன் மடியில் அணைத்துக் கொண்டு தெருவில் வேதனையோடு விழுந்து கிடக்கும் ஒரு காட்சியை படமாக வரைந்து கொண்டிருந்தான். அந்த காட்சி அவனை அதிகமாக பாதித்துவிட்டது. சட்டென தான் ஓவியம் வரையும் பிரஷ்ஷையும், பெயிண்ட்டையும் தூக்கி எறிந்துவிட்டு இப்படிப்பட்ட காட்சியை ஓவியமாக வரைவதை நிறுத்தி விட்டு, அந்த காட்சி இருக்கும் இடத்தை நேரில் பார்ப்பதற்கும், அவர்களை மீட்பதற்கும் ஒரு மிஷனெரியாக ஆப்பிரிக்காவை நோக்கி புறப்பட்டார். பிற்காலத்தில் இந்த மிஷனெரி ஒரு பிஷப்பாக மாறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**இரண்டு ஆண்டுகளில் மரித்து விடுவாய்:**

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் படித்து முடித்த ஒரு வாலிபன் ஆப்பிரிக்காவிற்கு மிஷனெரியாகப் போக விரும்பினான். இவன் நன்கு அறிந்த பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் ஒருவர் இவனைப் பார்த்து இன்னும் 2 ஆண்டுகளில் நீ மரிக்கப் போகிறாய். ஆப்பிரிக்காவிற்கு போகப் போகிறேன் என்கிறாயா? உனக்கு என்ன பைத்தியம் பிடித்திருக்கிறதா? என்று கேட்டாராம். அதற்கு அந்த மாணவன் ஆப்பிரிக்காவின் கிறிஸ்துவிற்காக ஒரு நல்ல அஸ்திபாரக் கல்லாக மாற விரும்புகிறேன். எப்படியாவது ஆப்பிரிக்கா கிறிஸ்துவிற்காக ஆதாயப்பட்டால் அதுவே எனக்குத் திருப்தி என்று அந்த 22 வயது வாலிபன் கூறினான். ஆசிரியர் சொன்னபடியே அவன் 2 ஆண்டுகளில் மரித்து விட்டான். அவன் விரும்பியபடியே ஆப்பிரிக்காவிற்குச் சென்று தான் சாகும் வரை ஒரு மிஷனெரியாக பின் பிரிந்து விட்டு யாரும் பார்க்க முடியாத ஒரு அஸ்திபாரக் கல்லாக அவன் மாறினான்.

யாருக்கு ஊழியம் செய்வது என்று நீங்களே இப்போது முடிவு செய்யுங்கள். ஆனால் நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்.

அப்பொழுது இஸ்ரவேல் மக்கள் அனைவரும் நாங்கள் ஆண்டவருக்கு ஊழியம் செய்வோம் என்றனர் (யோசு 24:15,21)

**4. ஆண்டவருக்குக் கீழ்ப்படியுங்கள்**

நீங்கள் என்மீது அன்பு செலுத்துவது உண்மையானால் என் கட்டளைகளைக் கடைபிடியுங்கள் (யோ 14:15)

நான்காவதாக நாம் கடவுளை நேசிப்பது உண்மையானால் அவருக்கு கீழ்ப்படிய வேண்டும். இதைப் பற்றி எழுதும் போது மல்கியா தீர்க்கதரிசி இவ்வாறு குறிப்பிடுகிறார். மகன் தன் தந்தையையும், வேலைகாரன் தன் எஜமானனையும் கனம் பண்ணுகிறார்களல்லாவா? நான் பிதாவானால் எனக்கு செலுத்த வேண்டிய கனம் எங்கே? நான் எஜமானன் என்பது உண்மையானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே? என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார் என்று எழுதுகிறார்.

ஆண்டவரை உண்மையாகவே நாம் நேசிக்கிறோம் என்பது உண்மையானால் அவரது கட்டளைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும். அவைகளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.

ஒரு மனிதனுக்கு எவ்வளவு கஷ்டமான வேலையைக் கொடுத்தாலும் எவ்வளவு வேலையை கொடுத்தாலும். எவ்வளவு பெரிய ஆபத்தான செயலை செய்யச்சொன்னாலும் – எதையும் செய்ய அவன் முன்வருவான். ஆனால் இன்னொருவருக்கு கீழ்படி, அடங்கிப்போ, அவன் சொல்படி செய் என்று சொல்வோமானால் அதுதான் அவனுக்கு மிகப்பெரிய கடினமான காரியமாகத் தோன்றும் இது மனித இயல்பு.

பல சிறுவர்கள் சேர்ந்து ஏதோ ஒரு விளையாட்டு விளையாடினார்கள். திடீரென்று அந்த விளையாட்டு நின்றுவிட்டது காரணம் என்னவென்று விசாரித்தப்போது ஒரு சிறுவன் கொடுத்த பதில் **Uncle** நாங்க **Army** விளையாட்டு விளையாடினோம். ஆனால் எல்லாருமே கேப்டனாக இருக்க விரும்புகிறார்கள். யாருமே **Soldier** ஆக இருக்க விரும்பவில்லை. அதனால் தான் விளையாட்டு நின்றுவிட்டது.

கீழ்ப்படிதல் மிகக் கஷ்டமானது, கடினமானது, கீழ்படிதல் என்ற பாதையானது கல்லும், முள்ளும் நிறைந்தது. கரடுமுரடானது, கடினமானது அது கற்றுக்கொள்ளப்பட வேண்டியது.

## 4 (a) குதிரைப்பயிற்சி – கடினமான பயிற்சி

எகிப்திய குதிரைகளை பழக்குவிக்கும் போது அந்தக் குதிரைக்கு பல நாட்களாக உணவு கொடாமல் பட்டினியாக வைத்திருப்பார்கள். அப்படி பல நாட்கள் பட்டினியாக இருந்த பின்பு ஒரு குறிப்பிட்ட இடத்தில் அது விரும்பி சாப்பிடும் கொள்ளுவை வைத்துவிட்டு குதிரைகளை அவிழ்த்து விடுவார்களாம். அப்பொழுது இந்த குதிரைகள் தீனி வைக்கப்பட்டிருக்கும் இடத்தை நோக்கி ஓடும். அப்படி ஓடும்போது அதன் பாதி வழியில் ஒரு விசில் மூலம் அழைப்பு கொடுக்கப்படும். அப்பொழுது சில குதிரைகள் அந்த விசில் சத்தத்தற்கு செவி கொடுக்காமல் கீழ்படிய மறுத்து அந்த ஆகாரம் வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு போய் சாப்பிடும். ஆனால் வேறு சில குதிரைகள் விசில் அடிக்கப்பட்ட திசை நோக்கி ஓடும். இவைகளை யுத்த குதிரைகளாக பயன்படுத்துவார்கள். இதற்கு மாறாக விசில் சத்தத்தையும் எஜமானுக்கு கீழ்படிவதையும் உதாசீனம் செய்துவிட்டு தனது உணவை நோக்கி ஓடும் குதிரைகளை வண்டி இழுப்பதற்கு உபயோகிப்பார்கள்.

ஆம் ! ஆண்டவருக்கு நாம் கீழ்படிய வேண்டும். கேள்வி கேட்காத கீழ்படிதல், முழு கீழ்படிதல் பல்லைக்கடித்துக்கொண்டு மனதிற்குள் முறுமுறுத்துக்கொண்டு அரை மனதுடன் கீழ்படியும் கீழ்படிதல் கீழ்படிதல் அல்ல.

இந்த கீழ்படிதலை 3 வகையாக நான் பிரிக்க விரும்புகிறேன். முதலாவதாக துணிகரமான கீழ்படியாமை , இரண்டாவது அரைகுறை கீழ்படிதல், மூன்றாவது பூரணமான கீழ்படிதல்

**4( b) அப்பட்டமான துணிகரமான கீழ்படியாமை** இதற்கு நல்ல உதாரணம் – ஆதாம், ஏவாள் விலக்கப்பட்ட கனியை புசிக்கக் கூடாது என ஆண்டவரது கட்டளையை தெரிந்துக்கொண்டே அப்பட்டமாக மீறினார்கள். அதன் விளைவு இருவரும் ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியே துரத்தப்பட்டார்கள்.

யோசுவா காலத்தில் வாழ்ந்த ஆகான் என்ற மனிதன் (யோசு 7:22) ஆண்டவருக்கு விரோதமாக துணிகரமான பாவத்தை செய்தான். விளைவு அவன் கல்லெறியப்பட்டு கொல்லப்பட்டான். இந்த செய்தியை வாசிக்கிற நீங்கள் தேவனுக்கு விதோரமாக துணிகரமான பாவம் செய்திருக்கிறீர்களா? உங்களுக்கே செய்திருந்தல் ஆண்டவருடைய பாதத்தில் விழுந்து மன்னிப்புக்கேளுங்கள். அவர் உங்களை மன்னிக்கிறதற்கு ஆயத்தமாக இருக்கிறார்.

## 4( c) அரைகுறை கீழ்படிதல்

இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் ஆண்டவரது கட்டளைக்கு கீழ்படிவது போல் நடிப்பார்கள் வெளிப்படையாக அவர்களது செயல்கள் தவறாகத் தோற்றமளிக்காது. ஆனால் மேல் வாரியாக உள்ள மூடலை சற்று நீக்கிவிட்டுப் பார்த்தால் அந்தசெயல் கீழ்ப்படியாமை என்பது விளங்கும். இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுல் இதற்கு நல்ல உதாரணம். 1சாமு. 15:1–25 வேதப் பகுதியை வாசித்துப் பாருங்கள். எதிரிகளோடு யுத்தம் செய்தான். அவர்கள் மேல் வெற்றி கொண்டான். ஆண்டவர் கொடுத்த கட்டளை என்ன தெரியுமா ? எதிரிகள் அனைவரையும் அவர்கள் ஆடு, மாடுகள் அனைத்தையும் அழிக்க வேண்டும் என்பது இங்குதான் சவுல் ராஜா சற்று சறுக்க

ஆரம்பித்தான், எதிரியின் ராஜாவாகிய ஆகாகை கொல்லாமல் உயிரோடு வைத்துவிட்டான். ஆடு மாடுகளில் உயர்த்தரமான, நல்ல விலைக்கு போகும் ஆடுகளையும், மாடுகளையும் இவன் கொல்ல மறுத்துவிட்டான். அவைகளை ஆண்டவருக்கு பலியிடவதற்காக என்ற போர்வையில் அவைகளை தனக்கென வைத்துக்கொண்டான். உபயோகமில்லாத ஆடு, மாடுகளை மாத்திரம் அவன் பலியிட்டான். இதைத்தான் நான் அரைகுறை கீழ்படிதல் – என்று சொல்லுகிறேன். அரைகுறை கீழ்படிதல் அரை கிணறு தாண்டுவதற்கு சமானம்.

### 4 (d) முழுக்கீழ்படிதல்

பூரண கீழ்ப்படிதல் என்றால் என்ன என்பதை ஆபிரகாமின் வாழ்க்கையில் நாம் கற்றுக்கொள்ள முடியும். தன் மகனாகிய ஈசாக்கை பலியிட அவன் முழு மனதோடு முன் வந்தான். அப்படிப்பட்ட பூரணமான முழு கீழ்ப்படிதலைத்தான் ஆண்டவர் நம்மிடம் எதிர்ப்பார்க்கிறார்.

எசேக்கியா தேவனுடைய ஆலயத்தின் வேலையிலும் தேவனைத் தேடும் காரியத்திலும் எல்லாவற்றிலும் தன் முழு இருதயத்தோடு கர்த்தருக்கு முன்பாக நன்மையும் செம்மையும் உண்மையுமானதையே செய்தான். (2 நாளாப் 31:20,21)

இயேசு மனுஷ ரூபமாய் காணப்பட்டு, மரண பரியந்தம் கீழ்படிந்து தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி 2:8)

### 5 தேவையோடு இருப்பவர்களுக்கு கொடுங்கள்

என் பிள்ளைகளே வார்த்தையினால் மாத்திரமல்ல, உங்கள் கிரியையினால் அன்பு கூறுங்கள். குறைச்சலோடு ஒருவன் இருந்தால் அவனுக்கு உங்கள் ஆஸ்தியை பகிர்ந்து கொடுக்க நீங்கள் முன் வந்தால்தான் தேவனுடைய அன்பு உங்களுக்குள் இருக்கிறது என்பதை உங்களால் நிரூபிக்க முடியம் ( 1 யோ. 3:17,18)

நம்மிடத்தில் தேவனுடைய அன்பு நிலைக்காண்டிருக்கிறது என்பதற்கு 5வது நிரூபணம் – நம்மிடத்தில் உள்ள உலக ஆஸ்தியை தேவையோடு இருக்கிற இன்னொரு சகோதரனோடு பகிர்ந்து கொள்ள நாம் முன்வர வேண்டும். ஆண்டவருக்கு கொடுப்பதை பொறுத்தவரையில் 3 வகையான கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தில் இருப்பதை சற்று சுவாரஸ்யமாக கூறுகிறார்.

### 5 (a) முதலாவது கல் போன்றவர்கள் :

இவர்களை சம்மட்டி கொண்டுதான் அடிக்க வேண்டும். அப்படியே அடித்தாலும் வெறும் சில்லுகளும் சிறு சிறு கல்லுகளும் தான் சிதறும்

### 5 (b) இரண்டாவது வகை – பசு போன்றவர்கள்

இவர்களிடத்திலிருந்து நீங்கள் ஊழியத்திற்கு பணம் வாங்க வேண்டுமானால் காலம் பார்த்து கொஞ்சம் எண்ணெய் போட்டு பாலைக் கறக்கவேண்டும். எவ்வளவு அதிகம் கறக்கிறீர்களோ அந்த அளவுக்கு உங்களுக்கு பலன் கிடைக்கும்.

### 5 (c) மூன்றாவது வகை = கோழி

யார் கேட்டாலும், கேட்காவிட்டாலும், இந்த கோழி தானாகவே முட்டை போட்டு விடும். நாம் பணம், உதவி கேட்பதற்கு முன்பே இவர்கள் கொடுத்து விடுவார்கள்.

ஆண்டவருக்கு விசனமாயுமல்ல, கட்டாயமாகவும் அல்ல, உற்சாகமாய் கொடுக்கிறவரிடத்தில் தேவன் பிரிமாயிருக்கிறார். (2 கொரி 4:7) ஆண்டவரிடத்தில் நாம் பெற்ற ஆசீர்வாத்தை மற்றவர்களுக்கு கொடுக்க முன் வருபவர்கள் யோர்தன் நதியைப்போல ஓடு தண்ணீராக இருக்கிறார்கள். அங்கு நீரில் வாழும் உயிர்கள் பலுகிப்பெருகும் ஓர் இடமாக இருக்கும் அதற்கு மாறாக பெற்ற ஆசீர்வாதத்தை தங்களுக்குள்ளே மாத்திரம் அடக்கி வைப்பவர்கள் – சவக் கடலைப்போல (Dead Sea) இருப்பார்கள். அங்கிருந்து தண்ணீர் வெளியே செல்லாது (காரணம் இந்த உலகத்திலேயே தாழ்வான இடம் சவக்கடல்தான்

## 5 (d) ஆண்டவர் உங்ளிடம் பேசினார் – நீங்கள் மறந்து விட்டீர்கள்

ஏழை மக்கள் குடியிருக்கும் பகுதிக்கு அருகில் உள்ள ஆலயத்தில் நடைபெறும் ஞாயிறு பள்ளிக்கு ஒரு ஏழை சிறுவன் கிழிந்த சட்டையுடனும், சாப்பிடுவதற்கும் வசதியில்லாத நிலையில் வந்து கொண்டிருந்தான். பல வாரங்கள் வந்து வசனத்தை கேட்டான். ஆண்டவர் மேல் அவனுக்கு கொஞ்சம் விசுவாசம் கூட வந்துவிட்டது. அந்நிலையில் யாரோ ஒருவர் தம்பி ஆண்டவர் உனக்கு சட்டை கூட கொடுக்கலையா? ஆண்டவர் நல்லவரா? கெட்டவரா? என்று கேட்டார்களாம். அதற்கு அந்த சிறுவன் ஆண்டவர் நல்லவர்தாங்க. அவர் சிலரிடத்தில் என் ஏழ்மை நிலைப்பற்றி பேசியிருப்பார். ஆனால் அவங்க கீழ்ப்படியல அவ்வளவுதான் என்று பதில் சொன்னானாம் பார்த்தீர்களா ? எவ்வளவு ஞானமான விசுவாசம் நிறைந்த பதில்

ஒரு வேளை நம் உள்ளத்தில் அன்பு இல்லாமல் ஒருவருக்கு நாம் பணம் கொடுக்க முடியும் ஆனால் உள்ளத்தில் அன்பை வைத்துக்கொண்டு கொடுக்காமல் இருக்க இயலாது.

நீ என்னை நேசிக்கின்றாயா? என்று ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் பார்த்து கேட்கிறார். என்ன பதில் சொல்வோம். நாம் ஆண்டவரை நேசிப்பது உண்மையானால் முதலாவது கடவுளுக்கு பயப்படுகிற பயம் நமது வாழ்க்கையில் காணப்படுகிறதா? இவர் கடவுளுக்கு பயந்தவர் என்று உங்களைப்பற்றி மற்றவர்கள் சொல்ல முடியமா? கடவுளுக்கு பயப்படுகிற பயம் தர்மம் தலைகாப்பது போல, கடவுள் பயம் உங்களை சுற்றிலும் உங்களது பாதுகாப்பு கவசமாக இருக்கும் என்பது உறுதி.

இரண்டாவதாக பூர்வ பாதை எது ? கர்த்தருடைய வழி இதுவே. இதில் நட என்று கூறும் ஆண்டவரது ஆலோசனையை கேட்டு அவரது வழிகளில் நடவுங்கள்.

மூன்றாவதாக ஆண்டவரை நேசிப்பது உண்மையானால் யோசுவாவை போல நானும் என் வீட்டாரும் கர்த்தரையே சேவிப்போம் என்று உறுதியாக திர்மானம் எடுங்கள்.

நான்காவதாக அவரை நேசிப்பது உண்மையானால் அவருக்கு கீழ்படியுங்கள் அரைகுறையாக அல்ல முழு மனதோடு நூறு சதவீதம் கீழ்படியங்கள் ஆண்டவர் எள் என்று சொன்னால் எண்ணெய்யாக மாறுங்கள். எட்டு அடி பாய் என்றால் 16 அடி பாயுங்கள்.

கடைசியாக ஆண்டவரது அன்பு உங்களுக்குள் நிலைகொண்டு வாசமாய் இருப்பது உண்மையானால் உங்களது உலக ஆஸ்தியை கணக்கை பொருளை தேவையோடு இருக்கும் மக்களுக்கு பகிர்ந்து கொடுக்க முன் வாருங்கள்.

இப்பொழுது விசவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது.

இவைகளில் அன்பே பெரியது. ( 1 கொரி. 13:13)

# உலகம்

**உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூறாதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை** என்று யோவான் எழுதியிருக்கிறார். (1யோ. 2:15) **தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை தன்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்** என்று யோவான் 3:16ல் நாம் வாசிக்கிறோம். இதற்கு **தேவன் உலகத்தில் அன்பு கூர்ந்தார்** என்று பார்க்கிறோம். ஆனால் 1 யோவான் 2:15ல் **உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்பு கூறாதிருங்கள்** என்று கூறப்படுகிறது. இவ்விரு வசனங்களும் முரன்படுவதைப்போல் தோன்றினாலும் இதில் முரன்பாடு எதுவும் கிடையாது. ஏனென்றால் என்கிற சொல் திருமறையில் பல விதமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

## 1. தேவன் படைத்த உலகம்

உலகம் என்பதற்கு **தேவன் படைத்த உலகம்** என்று பொருள் உண்டு. தேவன் தாம் உண்டாக்கிய எல்லாவற்றையும் பார்த்து அது நல்லது என்று கூறினார். 1 கொரி .3:21-24ல் பவுல் நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள் கிறிஸ்து தேவனுடையவர், ஆகையால் உலகம் உங்களுக்குரியது என்று எழுதுகிறார். இது தேவன் உண்டாக்கிய உலகமாக குறிக்கப்படுகிறது. இந்த உலகத்திலே உண்டாக்கப்பட்ட காரியங்களெல்லாம் தேவனின் மக்களுக்காகவும் அவர்களின் நல்வாழ்க்கைக்காகவும் அவர்கள் அனுபவிப்பதற்காகவும் உண்டாக்கப்பட்டன. இந்த உலகம் நல்லது என்று கூறினாரே. அந்த கூற்றை அவர் மாற்றவே இல்லை. அன்றிலிருந்து இன்றுவரை அவர் உருவாக்கிய உலகம் நல்லாய்தான் இருக்கிறது. ஆகையினாலே உலகத்தைவிட்டு ஒருவன் தப்பி ஓடுவதின்மூலம் தேவனை நெருங்கி சேருகிறான் என்று ஒருகாலும் திருமறை கூறவில்லை. தேவன் படைத்த உலகம் நல்லது. இது நமக்குறியது, நாம் அதை ஆட்கொள்ளவேண்டும். அனுபவிக்க வேண்டும் என்று திருமறை போதிக்கிறது.

## 2. மக்கள் நிறைந்த உலகம்

இரண்டாவதாக உலகம் என்கிற சொல் மக்கள் நிறைந்த உலகம் என்று பொருள்படுகிறது. இந்த உலகத்திலிலே ஆண்களும் பெண்களும் பல இனத்தாரும் நிறத்தாரும் , நாட்டாருமாக மக்கள் உண்டாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த மக்கள் நிறைந்த உலகத்தை நாம் நேசிக்க வேண்டும். இதை மீட்பதற்காகவே இயேசு கிறிஸ்து உலகத்திற்கு

வந்தார். யோ. 3:16ல் குறிக்கப்டும் தேவன் அன்பு கூர்ந்த உலகம் இந்த மக்கள் நிறைந்த உலகத்தையே குறிக்கிறது.

**3. வாழ்க்கை முறையான உலகம்**

மூன்றாவதாக உலகம் என்கிற சொல் 1 யோ. 2:15-16ல் தேவனுக்கு விரோதமான வாழ்க்கை முறையை காட்டுகிறது. தேவனுக்கு விரோதமாக கலகம் பண்ணும் மனித சமுதாயத்தின் வாழ்க்கை முறை இது. இது தேவனுக்கு விரோதமானது . இந்த உலகத்திலே எல்லாவற்றையும் அனுபவிப்பதற்காக தேவன் உண்டாக்கினார். ஆகையால் நாம் எல்லாவற்றையும் தடையில்லாமல் அனுபவிக்கலாமா ? தேவன் உண்டாக்கின உலகத்திலே பாவம் நுழைந்துவிட்டது. மனிதன் இசையை ரசிக்கலாம். இசை அவனுக்காகவே உண்டாக்கப்பட்டது. ஆனால் இசைக்குள்ளும் பாவம் நுழைந்துவிட்டபடியினால் எல்லா இசையையும் நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது.கீழான உணர்ச்சிகளை தூண்டக்ககூடிய இசையும் உண்டு. அதிலே ஒரு விசுவாசி பங்குகொள்ள முடியாது. இப்படியாக உலகத்தின் உள்ளேயே ஒரு உலகம் உண்டாகிவிட்டது. தேவன் உண்டாக்கின உலகத்திற்குள்யே மனிதன் முரட்டாத்தினால் தனக்கென்று இன்னொரு உலகத்தை உண்டு பண்ணிக்கொண்டான். இந்த இரண்டாவது உலகத்தைத்தான் நாம் தவிர்க்க வேண்டுமென யோவான் எழுதுகிறார்.

உலகத்தின் அன்பு கூறாதிருங்கள் என்று கூறும்போது விழுந்துபோன மனிதன் தன்னுடைய முரட்டாதத்தினாலே தேவனுக்கு இடங்கொடதபடிக்கு தனக்கென்று ஒரு வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டான். அந்த வாழ்க்கை முறைத்தான் நேசிக்ககூடாது என்று யோவான் எழுதுகிறார்.

உலகத்தின் அன்பு கூர்ந்தால் நம்மிடம் பிதாவின் அன்பு இல்லை. உலகத்தில் அன்பு கூறாதிருங்கள் என்பதோடு அவர் நிறுத்திக்கொள்ளவில்லை. தேவனிடத்தில் அன்பு கூற வேண்டும். அவருக்கு முதலிடம் கொடுத்து முழுமனதோடு அவரை நேசிக்க வேண்டும். அப்படி நேசிப்பதற்கு உலக அன்பு தடையாய் இருக்கிறது. ஆகையினாலே தான் உலகத்தில் அன்பு கூறாதிருங்கள் என்று கூறுகிறார்.

உலகத்தையும் ஆண்டவரையும் நாம் ஒன்றாய் நேசிக்கமுடியாது. இருமனம் உள்ள மக்கள் எப்பொழுதுமே சிக்கலான நிலையில் அகப்பட்டுக்கொள்வார்கள். தேவ சித்தத்தை நாம் செய்ய வேண்டுமானால் உலகத்தை நேசிக்க முடியாது. இன்றைக்கு அநேக வாலிபர்கள் தேவ சித்தம் என்று அறிவதற்கு காத்திருக்கிறார்கள். ஆனால் உலக ஆசைகள் தங்கள் இருதயத்தில் பேணி வைத்து தேவனுடைய சித்தத்தை அறிய முற்படும்போது அவரவர்கள் அதை தெளிவாக தெரிந்துக்கொள்ள முடியாது. ஆகையினாலே தான் உலகத்தில் அன்பு கூறாதிருங்கள் என்று யோவான் எழுதுகிறார்.

## வாழ்க்கை முறையின் இச்சைகளும் பெருமைகளும்

1 யோவான் 2:16ல் குறிப்பிடப்பட்டுள்ள உலகமானது தேவன் படைத்த உலகம் அல்ல. மக்கள் நிறைந்த உலகமும் அல்ல. இது மனிதன் தேவனை ஒதுக்கி வைத்து தனக்காகவே அமைத்துக்கொண்ட ஒரு வாழ்க்கை முறையென்றும் அவ்விதமான வாழ்க்கை முறையைக்கொண்டு சமுதாயம்தான் உலகம் என்று கவனித்தோம். உலகம் என்று இன்னும் தெளிவாய் 1 யோவான் 2:16ல் யோவான் விளக்கிக்காட்டுகிறார். அந்த வசனத்தை சற்று ஆழமாக கவனிப்போம்.

**ஏனெனில் மாம்சத்தின் இச்சையும் கண்களின் இச்சையும் ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளையெல்லாம் பிதாவினால் உண்டானவைகளல்ல. அவைகள் உலகத்தினால் உண்டானவைகள்.** (1 யோ. 2:16) இவ்வசனத்தில் உலகம் என்பது மனிதன் தனக்காக சுயநலமாக அமைத்துக்கொண்ட ஒரு வாழ்க்கை முறையை குறிக்கிறது. இந்த வாழ்விலே மூன்று அம்சங்கள் உண்டு. **மாம்ச இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை**. இவை மனிதனை கீழ்படிதலில் பாதையிலிருந்து இழுத்துக்கொண்டு போகிறவை.

ஆதியாகமம் 3:16ல் சாத்தான் சர்பத்தரின் உருவத்தில் வந்து ஏவாளை சோதித்த சம்பவத்தை வாசிக்கிறோம். தேவன் நன்மை தீமை அறியக்கூடிய மரத்தின் கனியை அவர்கள் புசிக்கக்கூடாது, மற்ற எந்த மரத்தின் கனியையும் புசிக்கலாம் என்று கூறியிருந்தார். மனிதனுக்கு தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பை கொடுக்கவும் அவன் தெரிந்துகொள்வதின் மூலமாய் கீழ்படிதலை கற்றுக்கொள்ளவும் தேவன் ஒழுங்கு செய்திருந்தார். ஏவாள் அந்த கனியை புசிப்பதற்கு நல்லது என்று பார்த்தாள். அது அவள் பார்வைக்கு இன்பமாய் இருந்தது. அது புத்தியை தெளிவிப்பதற்கு இச்சிக்கத்தக்கது என்று கண்டாள். இந்த மூன்று செயல்களிலும் மாம்ச இச்சை கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை என்னவென்று நமக்கு தெளிவாகிறது. பார்வைக்கு இன்பம் என்பது கண்களின் இச்சையை குறிக்கிறது. புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்பட்டதக்கது என்பது ஜீவனத்தின் பெருமையை குறிக்கிறது.

மத்தேயு 4:1-11ல் நமது ஆண்டவரின் சோதனைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. சாத்தான் இயேசுவை வனாந்திரத்தில் சோதித்தான். முதலாவது சோதனையில் கற்களை அப்பமாக்கி அவருடைய பசியை ஆற்றிக்கொள்ளுபடி கூறினான். அது மாம்ச இச்சைகளின் சோதனை ஆகும். அவர் தேவாலயத்தின் மேலிருந்து தாழ குதித்தால் மக்கள் அந்த செயலை கண்டு அவரை தேவ குமாரனாக ஏற்றுக்கொள்வார்கள் என்று கூறினான். அது கண்களின் இச்சைக்குரிய சோதனையாகும். கடைசியாக இயேசுவை ஒரு உயர்ந்த மலையில் கொண்டுபோய் நிறுத்தி உலகத்தின் சகல ராஜ்ஜியங்களையும் அவருக்கு காண்பித்து அவனை அவர் தாழ விழுந்து பணிந்துக்கொண்டால் அந்த ராஜ்யமும் அதன் மகிமையும் அவருக்கு

உரியதாகும் என்று கூறினான். அது ஜீவனத்தின் பெருமையாகும். **மாம்ச இச்சை கண்களின் இச்சை ஜீனத்தின் பெருமை** என்ற வழிகளிலே சாத்தான் இயேசுவையும் சோதத்தான்.

### அ. மாம்ச இச்சை

மாம்சம் என்று கூறும்போது மனித உடலை மட்டும் குறிப்பதல்ல. இது மனிதனுடைய பாவ சுபாவத்தையும் குறிப்பதாகும். உடல் இயற்கையாகவே பாவம் உள்ளது அல்ல. உடலின் மூலமாகத்தானே எல்லா சோதனைகளும் வருகின்றன. ஆகையால் இந்த உடலை துன்புறுத்தி கொன்று போடலாம் என்று சிலர் யோசிப்பர். ஆனால் இது திருமறைக்கு ஏற்ற சிந்தனை அல்ல. நம்முடைய உடல் பாவத்துக்குரியது அல்ல. இது தேவனால் நமக்கு கொடுக்கப்பட்டது. அவர் வாழும்படியாகவும் அவர் மகிமைபடும்படியாகவும் அவருக்காக நாம் உபயோகிக்கக்கூடியது நம் உடல். இந்த உடலை பாவத்துக்கென்று விற்றுபோடலாம் அல்லது தேவனுக்கென்று ஒப்புக்கொடுக்கலாம். இரண்டுமே நம் கையில்தான் இருக்கிறது. மனிதன் தன்னுடைய சித்தத்தில் பாவம் உள்ளவனாய் இருக்கிறான்.

பாவத்தை தெரிந்துக்கொள்ளகூடிய மனநிலை அவனுக்குள்ளேயே இருக்கிறது. இந்த பாவ தன்மையினால் அவன் தன் சரீரத்தை தவறான ஆசைகளுக்கு விற்றுபோடுகிறான். உடலின் ஆசைகள் எல்லாம் பாவமானவை என்று நாம் கூறிவிடமுடியாது. உடலின் ஆசைகள் இயற்கையாகவே மனிதனுக்கு கொடுக்கப்பட்டவை, அவற்றை நாம் ஒதுக்கிவிட முடியாது. அவற்றை சரியான வழியிலே திருப்த்திப்படுத்த தேவன் ஒழுங்கு பண்ணியிருக்கிறார். உடலின் ஆசைகளையும் தேவைகளையும் தவறான வழியிலே பயன்படுத்தி கீழ்தரமான ஆசைகளுக்கு இடங்கொடுக்கும்போது அது மாம்ச இச்சையாகிறது. மனிதனுக்குள்ளே உள்ள பாவ சுபாவம் அவனுடைய உடலை தவறான இச்சைகளுக்கென்று வழி நடத்துகிறது..

நம் விசுவாச வாழ்க்கையில் மாம்ச இச்சை எவ்வளவு தூரம் இடையூராக இருக்கிறது. உலகத்தின் அன்புக்கு அது நம்மை வழி நடத்துகிறது. நம் தேவனுடைய சித்தத்தை அறியாதபடிக்கும் அவர் மேல் அன்புகொள்ளாபடிக்கும் நம் அன்பை அவிழ்த்திபோடுவது மாம்ச இச்சையாகும் எவ்வளவே ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் தேவனுடைய வழியை தெரிந்துக்கொண்டு அவர் ஊழியம் செய்கிறவர்கள் மாம்ச இச்சையினால் ஆவியிலே குருடாகி அவருடைய வழியை காணக்கூடாத நிலைக்கு வந்துவிடுகிறார்கள். உடலின் ஆசைகளை நாம் சரியான வழியிலே பயன்படுத்த வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்கு அவற்றை ஒப்புக்கொடுக்க வேண்டும். நம் பாவ சுபாவம் நம்முடைய உடலின் ஆசைகளின் ஆளும்படி இடம்கொடுக்ககூடாது.

### ஈ. கண்களின் இச்சை

இரண்டாவது கண்களின் இச்சை என்று யோவான் குறிப்பிடுகிறார். மாம்ச இச்சைக்கும்

கண்களின் இச்சைக்கும் வேறுபாடு உண்டு. கண்களின் பார்வைக்கு பகட்டாய் எது காணப்படுகிறதோ அதை தெரிந்துக்கொள்வது அது உண்மையாகவே நன்மையானதா தீமையானதா என்று யோசித்துப் பார்ப்பதில்லை. பார்வைக்கு விருப்பமுள்ளதாய் இருந்தால் போதும் உடனே அதை தெரிந்துகொள்கிறோம். அதுதான் கண்களின் இச்சை . கடை தெருவழியாய் நடந்துசெல்லும்போது பகட்டாய் காணப்படுவதெல்லாம் வேண்டுமென்று அதிலே கொண்டுபோய் பணத்தை கொட்டுவோமானால் அதுதான் சிறுபிள்ளைத்தனம். சிறுகுழந்தைகள் தான் கண்ணுக்குப்பட்டதெல்லாம் வேண்டுமென்பார்கள் சிறுகுழந்தைகள் நிழலை பார்த்து அதை கொண்டுவந்து கொடு என்று அழுவது விசித்திரமாக காணப்படுகிறதோ அவ்விதமாகத்தான் கண்ணுக்கு காணப்படுவதெல்லாம் எனக்கு வேண்டும் அதற்காக என்ன கிரயம் வேண்டுமானாலும் கொடுத்துவிடுகிறேன் என்று கூறுவது சிறுபிள்ளைதனமாகும். அதைத்தான் யோவான் கண்களின் இச்சை என்கிறார்.

நமது தீர்மானங்கள் தேர்ந்தெடுப்புகள் தேவ சித்தத்தத்தை அடிப்படையாக கொண்டவையாக இருக்க வேண்டும். கண்ணுக்கு விருப்பமானதை மட்டும் நாம் தெரிந்துக்கொள்ளக்கூடாது. கண்ணால் காண்பதை அது நன்மையானதா தீமையானதா தேவ சித்தத்திற்குரியதா அல்லது அதற்கப்பாற்பட்டதா என்று யோசித்து பார்த்து தெரிந்துக்கொள்ள வேண்டும்.

### இ. ஜீவனத்தின் பெருமை

எபேசியர் 2:1-3ல் இயேசு கிறிஸ்துவை ஒரு மனிதன் ஏற்றுக்கொள்வதற்கு முன்பு பாவத்திலே மரித்தவனாய் அவன் இருக்கும் நிலையில் அவனுடைய வாழ்க்கையை ஆட்கொண்டு நடத்தும் மூன்று காரியங்கள் குறிப்பிடப்படுகின்றன.

முதலாவது மாம்சம் குறிப்பிடப்படுகிறது. மாம்ச இச்சைகளின்படி அவன் இழுத்துச் செல்லப்படுகிறான். இரண்டாவது உலகம் குறிப்பிடப்படுகிறது. உலகத்தின் பழக்கங்கள் வழக்கங்கள், கோட்பாடுகள் அவன் வாழ்க்கையை நடத்துகின்றன. மூன்றாவது சாத்தான் குறிப்பிடப்படுகிறான். சாத்தானும் அவனை ஆட்டிவைக்கிறான் .ஆனால் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விசுவாசிகளான பிறகு இந்த மூன்றின் ஆதிக்கத்திலிருந்து நாம் விடுதலை பெறுகிறோம்.

உலகம் என்று கூறும்பொழுது அதிலே மூன்று அம்சங்கள் அடங்கியிருக்கின்றன என்று பார்த்தோம். மூன்றாவது அம்சமான ஜீவனத்தின் பெருமையை கவனிப்போம்.

**ஜீவன்** என்ற சொல் இருவிதமான பொருளில் புதிய ஏற்பாட்டில் எழுதப்படுகிறது. ஜீவன் என்ற சொல் இரு கிரேக்க சொற்களிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

ஒன்று தேவனுக்குரிய ஜீவன் - **நித்திய ஜீவன்** ஆகும். அது தேவ ராஜ்ஜியத்திற்குரிய ஜீவன் என்று பொருள்படும்.

இன்னொன்று மிருக வாழ்க்கைக்குரிய ஜீவன். தேவனற்ற ஒரு மனிதன் மிருகத்தைபோல நடத்தக்கூடிய வாழ்க்கை என்ற பொருள்படும்.

இந்த இரண்டாவது பொருளில்தான் 1 யோவான் 2:16ல் உள்ள **ஜீவனத்தின்** என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. ஜீவனத்தின் பெருமை என்பது கேவலமான ஒன்றாகும். மிருகத்தைபோல மனிதன் வாழும்போது அந்த தாழ்வான வாழ்க்கைகுரிய பெருமையாகும். அந்த பெருமையை நாம் நாடும்போது உலகத்திற்கு அடிமைப்பட்டவர்களாவோம் என்று யோவான் எழுதுகிறார்.

மற்றவர்கள் நம்மை புகழவேண்டும், மற்றவர்களின் பார்வைக்கு நாம் பெரியவர்களாக காணப்பட வேண்டும், உலகம் எதையெல்லாம் பெரிதாக பாராட்டுகிறதோ அதை நாமும் பெரிதாக பாராட்ட வேண்டும் என்று ஒரு மனிதன் வாழும்போது அது ஜீவனத்தின் பெருமை ஆகும். படித்து பட்டம் பெற்றவர்களெல்லாம் உலகத்தால் பாராட்டப்படுகிறார்கள். ஆகையினாலே தேவனின் சித்தம் பிரதானமானதல்ல படிப்பும் பட்டமும்தான் பெரியது என்று ஒருவன் கூறும்போது அவன் ஜீவனத்தின் பெருமைக்கு இடம் கொடுக்கிறான். பெரிய வீடும் மாட மாளிகையும் கொண்டால்தான் மற்றவர்கள்போல் நாமும் வாழலாம். அவர்களுக்கு இருக்கிறது எனக்கும் வேண்டும் என்ற மனப்பான்மையோடு ஒருவன் தேவனின் சித்தத்தை ஒதுக்கி வைத்து மாட மாளிகைகளையும், சொத்துக்களையும் தேடும் போது அது ஜீவனத்தின் பெருமையாகிறது. படிப்பு தவறல்ல சொத்தும் உடைமையும் உள்ளவர்களாய் இருப்பது தவறல்ல , மாட மாளிகைகளை தேவன் நமக்கு அளிப்பாரனால் அவற்றை பெற்றுக்கொள்வது தவறல்ல. ஆனால் தேவனின் சித்தத்தை ஒதுக்கி வைத்து வாழ்க்கையில் அவற்றிக்கு பிரதானமான இடம் கொடுப்போமானால் அது தவறானதாகும். அது ஜீவனத்தின் பெருமையாகும்.

அனேகமுறை நம்முடைய விசுவாச வாழ்க்கையிலே இவ்விதமான சோதனை ஏற்படுகிறது. தவறான வழியில் வாழ்கிறவர்களெல்லாம் பெயரும் புகழும்பெறுகிறார்கள். வசதி படைத்த வாழ்வை சம்பாதித்துக்கொள்கிறார்கள். கர்த்தருக்கொன்று வாழும் நமக்கோ எந்த விதமான வசதிகளும் இல்லை. சொத்து சுதந்திரமும் இல்லை என்று நாம் சோர்ந்து போவதுண்டு. மற்றவர்போல் வாழவேண்டும், மற்றவர்களுக்கு பெருமைகொடுக்கக்கூடியது எனக்கும் வேண்டும். தேவ சித்தம் பிரதானமானமதல்ல. எனவே நாம் எண்ணும்போது ஜீவனத்தின் பெருமைக்கு இடம் கொடுக்கிறோம்.

இன்றைக்கு உலகத்திலே பணம் இருந்தால் பாதுகாப்பு உண்டு என்று அநேகர் நினைக்கிறார்கள் . மனித பலம் இருக்குமானால் பாதுகாப்பு உண்டு என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் இவையெல்லாவற்றையும்விட நமக்கு பாதுகாப்பாக அமையக்கூடியது தேவனின் திருசித்தம்தான்.

**தேவ சித்தம் என்கிற வட்டத்தின் நடுமையத்தில் நான் இருக்கிறேன். அதைவிட வேறு எந்த பாதுகாப்பும் எனக்கு அவசியமில்லை** என்று ஒரு பக்தர் கூறினார்.

தேவனுடைய சித்தத்தின் மையத்தில் நாம் இருக்கிறோமா ? அவரை பிரியப்படுத்தவேண்டும் என்கிற வாஞ்சை பிரதானமாக நம் வாழ்க்கையை ஆட்டிக்கொண்டிருக்கிறதா? அப்படியானால் அதுதான் நமக்கு பாதுகாப்பாய் அமையும்.

**உலகமும் இச்சைகளும் ஒழிந்துபோம்.**

**தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்** என்று யோவான் எழுதுகிறார் (1 யோவான் 2:17)

டேவிட் லிவிங்ஸ்டன் என்ற பெயர்பெற்ற மிஷனரி வீரர் மரணமடைந்த வேளையில் அவரது அடக்க ஆராதனையில் கந்தல் அணிந்து பரட்டை தலையோடு ஒருவன் தேம்பி தேம்பி அழுதுகொண்டு நின்றுக்கொண்டிருந்தான். இங்கிலாந்திலுள்ள வெஸ்ட் மினிஸ்டர் ஆபே என்ற புகழ்பெற்ற ஆலயத்தில் அந்த அடக்க ஆராதனை நடந்தது. **லிவிங்ஸ்டனின்** சாவு உமக்கு இவ்வளவு துக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறதே. நீ அவருக்கு நெருங்கிய உறவினரா? என்று ஒருவர் அவனை கேட்டார்.

அதற்கு அந்த மனிதன் லிவிங்ஸ்டனும் நானும் ஒன்றாக வளர்ந்தோம். ஒரே தொழிற்சாலையில் வேலை செய்தோம். லிவிங்ஸ்டன் சுறுசுறுப்போடும் ஆர்வத்தோடும் எல்லா சமயத்தையும் பயன்படுத்தி தன் பக்கத்திலே ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு எப்பொழுதும் படித்துகொண்டிருப்பார்.

நான் அவரை பார்த்து படித்து பட்டம் பெற்று என்ன செய்யப்போகிறாய் ? என்று கேட்பேன் அப்பொழுது அவர் **நான்படித்து பட்டம் பெற்று இயேசு கிறிஸ்துவுக்கென்று ஒரு மருத்துவ மிஷனரி ஆவேன்** என்று கூறுவார். அவரை பார்த்த நான் நகைத்து பையித்தியக்காரன் பிழைக்க தெரியாதவன் என்றெல்லாம் கூறுயிருக்கிறேன். எங்களுடைய வாழ்க்கையின் வழிகள் பிரிந்தன. அவர் ஒருபக்கம் சென்றார். நான் இன்னொரு பக்கம் சென்றேன். வாழ்க்கையில் எனக்கென்று மேலான காரியங்களை தெரிந்துக்கொண்டேன். ஜீவனத்தின் பெருமை என்னை ஆட்கொண்டது.

ஆனால் இறுதியில் என் வாழ்க்கையிலே திருப்தி காணாதபடி குடிப்பழக்கத்திற்கு இடம்கொடுத்தேன். என் வேலை பறிபோய்விட்டது. என் மனைவியும் பிள்ளைகளும் என்னை விட்டு போய்விட்டார்கள். தெருவிலே அலைந்து திரிகிற ஒரு குடிகாரனாய் நான் மாறிவிட்டேன். ஒரு குடிகாரனின் கல்லறைத்தான் எனக்கு காத்திருக்கிறது.

தேவனை கனம் பண்ணின இந்த லிவங்ஸ்டனை இன்றைக்கும் உலகம் கனம் பண்ணுகிறது. தேவன் கனம் பண்ணுகிறார். நானோ வாழ்க்கையை இழந்துவிட்டேனே என்று அதற்காக தான் துக்கப்படுகிறேன் என்றான்.

**ஆம். உலகமும் அதின் இச்சையும் ஒளிந்துபோகும்**.

திருநெல்வேலிக்கு சுவிசேஷம் கொண்டு வந்த மிஷனரி

**தாமஸ் உவாக்கர்** தன் பைபிளில் கடைசி பக்கத்தில் எழுதி வைத்த குறிப்பு

அதில் ஒன்று

யோனா . 1:6

## நீ நித்திரை பண்ணுவது என்ன ?

1) நித்திரை பண்ணவேண்டிய ஆளா நீ ?
2) நித்திரை பண்ண வேண்டிய காலம் இதுவா ?
3) நித்திரை பண்ணவேண்டிய இடம் இதுவா ?

OCTOBER 2022

Printed Book (Periodical)

RNI Reg. No. TNBIL/2016/70171

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.